

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!




## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அளவில் நடத்திய 'என் உயிரினும் மேலான..!' பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

**13-10-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | வழக்கறிஞர் அருள்மொழி, எஸ்.கே.பி.கருணா, இந்திரகுமார் தேரடி | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி | டி.கே.பி. திருமண மண்டபம், திண்டிவனம்-மரக்காணம் சாலை, திண்டிவனம், விழுப்புரம்-1. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மருத்துவர் ஷஃபி சுலைமான், தமிழ் காமராசன் | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை | கே.பி.ஜெ.மஹால், திமிரி, மருதம்பாடி, இராணிப்பேட்டை-21. | முனைவர் சபாபதி மோகன், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, மருத்துவர் ஹபீஸ் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, டான் அசோக் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரி | தளபதி அரங்கம், கலைஞர் அறிவாலயம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், திருப்பூர்-4. | கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அமுதரசன் | கே.இ.பிரகாஷ், எம்.பி. |
| 6 | திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்கால் | பிலோமினா ஷாப்பிங் மால், வினோதகன் மருத்துவமனை எதிரில், அருளானந்தா நகர், மேற்கு விரிவாக்கம், தஞ்சாவூர்-7 | திண்டுக்கல் லியோனி, மருத்துவர் யாழினி, பொள்ளாச்சி சித்திக் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் | பி.ஆர்.மஹால், ஆலாத்தூர், ஊமச்சிக்குளம்-கடச்சனேந்தல் சாலை, மதுரை. | நாஞ்சில் சம்பத், எம்.எம்.அப்துல்லா எம்.பி., வே.மதிமாறன் | ஜி.பி.ராஜா |
| 8 | இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, | சுப்புலட்சுமி திருமண மண்டபம், பேருந்து நிலையம் அருகில், நாங்குநேரி, திருநெல்வேலி. | பொன்.முத்துராமலிங்கம், செந்தில்வேல், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | இன்பா ஏ.என்.ரகு |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● மண்டல அளவிலான பேச்சுப்போட்டிகள் காலை 9 மணிக்கே தொடங்கும். எனவே முதல் நாளே நடுவர்களும் பங்கேற்பாளர்களும் போட்டி நடைபெறும் பகுதிக்கு வந்துவிடவேண்டும். ● பங்கேற்பாளர்கள் தங்களுடன் ஒருவரை அழைத்து வரலாம். அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ● போட்டி நடைபெறும் அன்று, காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ● பங்கேற்பாளர்கள் கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் மூன்று தலைப்புகளைத் தங்கள் விருப்பத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி** ● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

மூன்று விருப்பத் தலைப்புகளில் நடுவர்கள் தரும் ஒரு தலைப்பில் போட்டியாளர்கள் பேச வேண்டும்.

● பேசுவதற்கான நேரம் ஐந்து நிமிடங்கள். மூன்று நிமிடங்களில் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாம் எச்சரிக்கை மணி ஒலித்ததும் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 08–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

## முதலமைச்சர் கோப்பை - 2024 போட்டிகள்!

# மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, அக். 12 -

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2024 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 10.09.2024 அன்று சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். மாவட்ட, மண்டல அளவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுப் பிரிவினர். மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் என மொத்தம் 11,56,566 நபர்கள் 36 வகையான விளையாட்டு போட்டிகளில், 168 பிரிவுக ளில் கலந்துக் கொண்டனர். சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் அக்டோபர் 4ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை, மாவட்ட, மண்டல அளவில் வெற்றி பெற்ற 33,000 நபர்கள் பங்கு பெறும், மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை 2024 போட்டிகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 04.10.2024 சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் வைக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகிறது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று முன்தினம் (10.10.2024) பதக்கம் பெற்றவர்களின் விபரங்கள்:

விளையாட்டு: கையுந்துப் பந்து பிரிவு: (பள்ளி மாணவியர்) இடம்: நேரு உள் விளையாட்டரங்கம்.

சேலம் - தங்கம்,

சென்னை - வெள்ளி,

ஈரோடு - வெண்கலம்,

விளையாட்டு: கையுந்துப் பந்து பிரிவு: (பள்ளி மாணவர்) இடம்: நேரு உள்விளையாட்டரங்கம்.

கோயம்புத்தூர் - தங்கம்

சென்னை - வெள்ளி

தூத்துக்குடி - வெண்கலம்

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: (Table Valut) (பள்ளிமாணவியர்), இடம்: AGB Complex, வேளச்சேரி.

தியாஹரிபிரகாஷ் சென்னை தங்கம்,

கே. ஆதிரை ன்னை வெள்ளி,

ஏ.வி. அஸ்வித்ரா செங்கல்பட்டு வெண்கலம்

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: (Floor Exercise) (பள்ளிமாணவர்) இடம்: AGB Complex, வேளச்சேரி

கே. சந்தானம் ஈரோடு - தங்கம்,

ஆர். ஹரிபிரசன்னா சென்னை வெள்ளி,

எஸ். சஞ்சய்ராம் சென்னை வெண்கலம்

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: Uneven Bars (பள்ளிமாணவியர்), இடம்: AGB Complex, வேளச்சேரி

டி. ராகவி ஈரோடு தங்கம்,

வி. அனுஷிவானி சென்னை வெள்ளி,

ஆர். சஞ்சனா ஈரோடு வெண்கலம்,

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், (Still Rings) (பள்ளிமாணவர்) பிரிவு:,இடம்: AGB Complex, வேளச்சேரி

எம்.ஜஸ்வின் சேலம் தங்கம்,

எம்.எம். ஆதித்யாசர்வேஷ் மதுரை வெள்ளி,

வி.ஜீவன் - ஈரோடு -வெண்கலம்,

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மாவட்டம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 10 | 7 | 10 | 27 |
| 2 | ஈரோடு | 7 | 3 | 4 | 14 |
| 3 | செங்கல்பட்டு | 6 | 1 | 1 | 8 |
| 4 | சேலம் | 4 | 4 | 4 | 12 |
| 5 | தஞ்சாவூர் | 3 | - | 1 | 4 |
| 6 | கோயம்புத்தூர் | 2 | 4 | 3 | 9 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 2 | 1 | 3 | 6 |
| 8 | தேனி | 2 | 1 | 2 | 5 |
| 9 | புதுக்கோட்டை | 1 | 3 | 1 | 5 |
| 10 | மதுரை | 1 | 2 | 2 | 5 |
| 11 | நாமக்கல் | 1 | 2 | - | 3 |
| 12 | சிவகங்கை | 1 | 1 | - | 2 |
| 13 | பெரம்பலூர் | 1 | - | - | 1 |
| 14 | திருவள்ளூர் | - | 2 | 4 | 6 |
| 15 | திருநெல்வேலி | - | 2 | - | 2 |
| 16 | கடலூர் | - | 1 | 3 | 4 |
| 17 | தர்மபுரி | - | 1 | - | 1 |
| 17 | விருதுநகர் | - | 1 | - | 1 |
| 17 | காஞ்சிபுரம் | - | 1 | - | 1 |
| 17 | கன்னியாகுமரி | - | 1 | - | 1 |
| 17 | தென்காசி | - | 1 | - | 1 |
| 17 | திருவண்ணாமலை | - | 1 | - | 1 |
| 23 | தூத்துக்குடி | - | - | 2 | 2 |
| 24 | வேலூர் | - | - | 1 | 1 |
| 24 | திருப்பூர் | - | - | 1 | 1 |
| 24 | விழுப்புரம் | - | - | 1 | 1 |
| 24 | திருவாரூர் | - | - | 1 | 1 |




சென்னை லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் உள்ள தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றக் கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (10.10.2024) உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் உயர்கல்வித் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் டாக்டர் எம்.பி.விஜயகுமார், (ஓய்வு), முதன்மைச் செயலாளர் / மாநில திட்ட இயக்குநர் டாக்டர் சீ.ஸ்வர்ணா, தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் த.ஆபிரகாம், தமிழ்நாடு காப்பகங்கள் மற்றும் வரலாற்று ஆய்வுத் துறை ஆணையர் முனைவர் ந.வெங்கடாசலம், கல்லூரி கல்வி இயக்க ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.